மலர் 2 இதழ் 2 அக்டோபர் 2017 ISSN – 2454-3993

# அஞ்செழுத்துமே அம்மையப்பர்

'சித்தாந்த இரத்தினம்' முனைவர் இராம. மோகன்
உதவி பேராசிரியர், தமிழ்த்துறை
கணேசர் கலை அறிவியல் கல்லூரி
மேலைச்சிவபுரி

"நமசிவாய வாழ்க! நாதன் வாழ்க!!" என அஞ்செழுத்து மந்திரத்தை முதலில் போற்றிய மாணிக்கவாசகர் பிறகு நாதன் தாளினைப் பொற்றுகிறார். "வேதம் நான்கிலும் மெய்ப்பொருளாவது நாதன் நாமம் நமசிவாயவெ" (3-49:1) என்பது திரு ஞானசம்பந்தர் வாக்கு. இத்தகு பெருமையுடைய அஞ்செழுத்து மந்திரத்தை 'நமசிவாய' என நகரத்தை முன்வைத்துச் சொல்லுவதா? அல்லது மந்திரத்தை "சிவாய நம" என சிகரத்தை முன்வைத்து ஓதுவதா? என்ற வினா சைவப் பெருமக்கள் மத்தியில் இன்றும் நிலவுகிறது. திருமுறைகள் மற்றும் வைச சித்தாந்த சாத்திரங்கள் வழியாக அஞ்செழுத்தின் முறை, வடிவம், பொருள், பயன் குறித்து இக்கட்டுரை விவரிக்கிறது.

பசு, பதி, பாசம் மூன்றும் அநாதி. பசு என்பது உயிர், பதி இறைவனைக் குறிக்கும். பாசம் என்பது ஆணவம், கன்மம், மாயை எனப்படும் மும்மலம். உயிர்கள் தத்தம் வினையால் பிறவி பெறுகின்றன. உயிர்களின் மூல மலம் ஆணவம். இதன் வழியாக உயிர்கள் பிறவிதோறம் பெற்ற மலம் கன்மம். இவ்விரு மலங்களையும் உயிர்கள் போக்கிக் கொள்ளும் பொருட்டு இறைவன் தன் கருணையால் படைத்துத் தந்தது உலகம் முதலிய மாயாமலம். இம்மூன்று மலங்களின் இயல்புகளை அறிந்துகொண்டு பற்றில்லாமல் நல்வாழ்வைப் பெறுவதற்கு 'நமசிவாய' என்னும் மந்திரத்தை வாய்விட்டுச் சொல்லிப் போற்ற வேண்டும். இதுவே உயிர்கள் பெற வேண்டிய முதல் அறிவாகும்.

**"செறிதரு கழல்கள் ஏத்தி சிறந்தினிது இருக்கமாட்டா**
**அறிவஜ இலாதவரைக் கண்டால் அம்ம நாம் அஞ்சுமாறெ"**
**(திருவாசம். அச்சப்பத்து - பா 8)**

**'நெறியறியென் நின்னையெ அறியேன் நின்னையெ அறியஜம்**
**அறிவு அறியேன் உடையாய் அடியென் உன் அடைக்கலமே"**
**(திருவாசகம், அடைக்கலப்பத்து - பா 9)**

எனும் பாடலடிகளில் மாணிக்கவாசகர் 'இறைவனை பொற்றுவதும், அதன்வழியாக இறைவனை அறிவதும்தான் அறிவு என்கிறார். முதல் அறிவாகிய இப்பக்குவம் பெற்ற பிறகு உயிர்களுக்கு இறைவனால் அருளப்படும் தூயஅறிவு 'சிவாய நம' எனச் சிந்திக்கும் நல்லறிவாகும். திருவாசகத்தில் "நமசிவாய என்று உன் அடிபணியாப் பேயன்" (செதிலாப்பத்து - பா 7) என்று உலகப்பற்றை விடவேண்டி விண்ணப்பித்த மாணிக்கவாசகர்,

**"நானேயோ தவம் செய்தென் 'சிவாய நம' எனப் டிபெற்றென்**
**தேனாய் இன்னமுதமுமாய்த் தித்திக்கும் சிவபெருமான்**
**தானெவந்து எனதுளம் புகுந்து அழயெற்கு அருள்செய்தான்**
**ஊன்ஆரும் உயிர்வாழ்க்கை ஒறுத்தன்றெ வெறுத்திடவே" (திருஏசறவு - பா. 10)**

என்ற பாடலில் திருப்டிபருந்துறையில் குருந்தமரத்தடியில் ஞான ஆசிரியனாக இறைவன் தோன்றி, ‘சிவாய நம’ எனத் தனக்கு ஓதி சிவதீட்சை வழங்கிய திறத்தயைும் தான் பிறவி வாழ்வை வெறுத்து, திருவருள் பெற்ற சிறப்பையும் எடுத்தியம்பியுள்ளார். இப்பாடல் சிகரத்தை முதலில்கொண்ட ‘சிவாய நம’ எனும் மந்திரமே திருவருள் கிட்டுவதற்கு துணை செய்யும் என்பதை அறிவுறத்துகிறது மேலும் இப்பாடலில் “தேனாய் இன்னமுதமுமாய் தித்திக்கும் சிவ பெருமான்” என்னும் அடி சிந்திக்கத்தக்கது. ‘தேன்’ என்பது உலக வாழ்க்கை சிறக்க உதவும் நமசிவாய என்னும் மந்திரத்தின் உருவகமாகும். ‘இன்னமுதம் என்றது மந்திரத்தின் உருவகமாகும். அஞ்செழுத்தை சொல்லும் முறையறிந்து சொன்னால் “மண்ணில் நல்லவண்ணம் வாழலாம் வைகலும் எண்ணில் நல்ல கதிக்கு யாதும் ஓர் குறைவில்லை” என்னும் திருஞானசம்பந்தர் வாக்கின் பொருளும் நன்கு புலனாகும்.

‘நமசிவாய என்பது தூலம். ‘சிவாய நம’ என்பது சூக்குமம். உலக வாழ்வு பற்றிய தெளிவு பெற்றபின் மலபரிபாகம், (மும்மலத்தெளிவு) இருவினை ஒப்பு (நல்வினை தீவினைகளைச் சமமாகக் கருதல்), சத்தினிபாதம் (திருவருள் வீழ்ச்சி) ஆகிய பக்குவ நிலைகளைப் பெற்று சிவானந்தம் பெறுவதற்கு ‘சிவாய நம’ என்னும் மந்திரம் துணை நிற்கும்.

**சாத்திரங்கள் கூறும் ஐந்தெழுத்து ஓதும் முறையும் பயனும்**

இறைவன் ‘அளவை என்னும் அறிவைக் கடந்தவன். பேரறிவு உடைய இறைவனின் சூக்கும வடிவாகிய ஐந்தெழுத்தை ஓதும் முறை பற்றி சாத்திர நூல்கள் எடுத்தியம்பியுள்ளன.

**“சிவசிவ என்கிலர் தீ வினையாளர்**
**சிவசிவ என்றிட தீ வினைமாளும்**
**சிவசிவ என்றிட தேவரும் ஆவர்**
**சிவசிவ என்னச் சிவகதி தானெ” (திருமந்திரம் - 2716)**

என்னும் திருமூலர் வாக்கு ‘சிவ’ என்னும் சூக்கும மந்திரத்தின் பெருமையை உணர்த்துகிறது மேலும். இப்பாடலில் சிற்றறிவு உடைய உயிர் சடமாகிய உலக வாழ்வை நீக்கி பேரறிவு உடைய இறைவனொடு கூடி நிலைத்த இன்பம் நுகர்வதை சிவகதி எனத் திருமூலர் சுட்டியுள்ளார்.

**“சிவன் அருள் ஆவி திரோதம் மலம் ஐந்தும்**
**அவன் எழுத்து அஞ்சின் அடைவாம் - சிவன் நின்று**
**நம் முதலா ஓதில் அருள் நாடாது நாடும்; அருள்**
**சிம் முதலா ஓது நீ சென்று” (உண்மை விளக்கம் - சூ. 41)**

என்னும் சாத்திரப்பாடல் ஐந்தெழுத்து அமைப்பையும் ஓதும் பயனையும் விள்ககுகிறது. இந்நூற்பாவில் சி - சிவன், வ. அருள், ய – உயிர், ந - திரோதானம் ம - மலம் என ஐந்தெழுத்தின் விளக்கம் எளிமையாகக் கூறப்பட்டுள்ளது. திரோதனம் என்பது ஆன்மா தன் வினைப்பயனால் இன்பதுன்பங்களை நுகரும்படி அருட்சக்தியானது வெளிப்படாது, மறைப்பாற்றலாக உதவுதல் ஆகும். மேலும் இந்நூற்பாவில் ‘சிவாய நம’ எனச் சிகரத்தை முன்வைத்து ஓதினால் அருள்சக்தி கிட்டும் என உறதிபட ஆசிரியர் கூறியிருப்பதை மனதில்கொள்ள வேண்டும்.

இறைவன் தன் கருணையால் இவ்வுலகையும், இவ்வுகில் தம்தம் வினைக்கேற்ப பிறவி எடுத்த உயிர்களுக்கு உடல் பேதங்களையும் அஞ்செழுத்தால் படைத்துத் தந்தான் எனத் திருமந்திரம் பகர்கிறது. இவ்வுண்மையை,

**"அஞ்செழுத்தால் ஐந்து பூதம் படைத்தனன்**
**அஞ்செழுத்தால் பல யோனி படைத்தனன்**
**அஞ்செழுத்தால் இவ் அகலிடம் படைத்தனன்**
**அஞ்செழுத்தாலே அமா்ந்து நின்றானே" (திருமந்திரம் - 966)**

எனும் பாடல்வழி உணரலாம்.

**'சிவாய நம' என சிந்திக்க**

அஞ்செழுத்தை ஓதும் முறை குறித்து தருமூலா் தெளிவுபடுத்தியுள்ளாா். நகரத்தை முதலில் உடைய நமசிவாய எனும் மந்திரம் வினைகளை நுகரவைத்துப் பக்குவப்படுத்தும் என்றும், சிகரன் முதலில் உடைய சிவாய நம எனும் மந்திரம் சதாசிவத்தொடு உயிரை கூட்டுவிக்கும் என்றும் உறுதியிடுகிறாா். இத்தத்துவத்தை,

**"நம்முதல் ஓா்ஐந்தின் நாடும் கருமங்கள்**
**அம்முதல் ஐந்தில் அடங்கிய வல்வினை**
**சிம்முதல் உள்ளெ தெளிய வல்லாகட்குத்**
**தம்முதல் ஆகும் சதாசிவத்தானெ" (திருமந்திரம் - 983)**

எனும் பாடல் வழி தெளியலாம்.

திருமூலா் உணா்த்திய இவ்உண்மையை உண்மை விளக்கம் 42 வது சூத்திரத்தில் உவமை நயத்தொடு விளக்கியுள்ளாா்.

**"அண்ணல் முதலா அா்காா் எழுத்து ஐந்தும்**
**எண்ணில் இராப்பகல் அற்ற இன்பத்தே நண்ணி**
**அருள் ஆனது சிவத்தெ ஆக்கும் அணுவை**
**இருள் ஆனது தீர இன்று"**

என்பது சூத்திரம். இதன் பொருள், அண்ணலாகிய சிவபெருமானைக் குறிக்கும் 'சி' முதலாக ஐந்தெழுத்தை எண்ணி வந்தால் இரவு போன்ற கேவல நிலையும், (பிறப்பிற்கு முற்பட்ட நிலை, இதனை மாணிக்கவாசகா் 'கல்லாகி என்பாா்) பகல் போன்ற சகல நிலையும் முற்பட்ட நிலை, இதனை மாணிக்கவாசகா் 'கல்லாகி' என்பாா்) பகல் போன்ற சகல நிலையும் (உலக வாழ்வு) நீங்கப்பெற்று சிவகதிப் பெற்றினை உயிா்கள் பெறும் என்பது தெளிவு.

**"சித்தமலம் அறுவித்து சிவமாக்கி எனை ஆண்ட அத்தன்" (அச்சோ பதிகம் - பா. 1)**

எனும் பாடலடியில் உயிா;கள் பெறும் முக்திப் பேற்றினை 'சிவமாக்குதல்' என குறித்துள்ளாா் மாணிக்கவாசகா்.

**அஞ்செழுத்தே அம்பலவாணனின் வடிவம்**

அஞ்செழுத்தே இறைவனின் வடிவம் என்பதைச் சாத்திர நூல்கள் உணா்த்தியுள்ளன.

**"ஆடும்படிகேள் நல்லம்பலத்தான் ஐயனே**
**நாடும் திருவடியிலே நகரம் - கூடும்**
**மகரம் உகரம் வளா்தோள் சிகரம்**
**பகரும் முகம் வா முடியப்பாா்" (உண்மை விளக்கம் - 32)**

என்னும் சூத்திரத்தில் இறைவனின் திருவடி 'ந'கரம், வயிறு 'ம'கரம், திருத்தோள் 'சி'கரம், திருமுகம் 'வ'கரம் திருமுழ 'ய'கரம் என அஞ்செழுத்தில் இறைவன் தோற்றம் அடங்கியுள்ளதை ஆசிரியர் விளக்கியுள்ளார்.

"அஞ்செழுத்தாலே அமர்ந்து நின்றானே" (திருமந்திரம் - 966) என்னும் தமிழ் மந்திர வாக்கு இறைவனின் வடிவம் அஞ்செழுத்தின் வடிவமாகும் என்பதை எளிமையாக உணர்த்துகிறது.

**அஞ்செழுத்தும் ஐந்தொழிலும்**

அஞ்செழுத்து மந்திரமே அரன் நிகழ்த்தும் ஐந்தொழில்களையும் சுட்டுகிறது என்பதைச் சைவ சமய அருளாளர்கள் விளக்கியுள்ளனர். "இறைவன் உயிர்களிடம்கொண்ட கருணையால் படைத்தல், காத்தல், அழித்தல் மறைத்தல், அருளல் என்னும் ஐந்தொழில்களைச் செய்கிறான். அத்தொழில்களைச் செய்யும் இறைவனைக் கூத்த பெருமானாக முன்னோர் உருவகித்தனர். அப்பெருமானுடைய கரங்களின் உள்ள படைகளும் பிறவும் ஐந்தொழிலெ உணர்த்துகின்றன" (சைவ சமய வளர்ச்சி. ப.241) என்னும் மெய்யறிஞர் மா.ராசமாணிக்கனார் கூற்று ஏற்புடையது.

**"அரன்துடி தோற்றம் அமைத்தல் திதியாம்**
**அரன்அங்கி தன்னில் அறையிற் சங்காரம்**
**அரனுற்ற அணைப்பில் அமரும் திரொதாயி**
**அரன்அடி என்றும் அனுக்கிரகம் என்னெ"**

என்னும் சாத்திரப்பாடலும் ஆடல் வல்லானின் ஐந்தொழில் நிகழ்த்தும் திருஅடையாளங்களை அஞ்செழுத்தோடு இயைத்துக் காட்டுகிறது.

1) உடுக்கை ஏந்திய திருக்கரம் - சி (படைத்தல்)
2) தூக்கிய திருவடியைக் காட்டும் வீசியகரம் - வ (அருளல்)
3) அமைந்த திருக்கரம் - ய (காத்தல்)
4) அனல் ஏந்திய திருக்கரம் - ந (அழித்தல்)
5) ஊன்றிய திருவடி - ம (மறைத்தல்)

என்னும் முறையில் மேற்கண்ட சூத்திரத்தில் இறைவனின் தோற்றம் பஞ்சாக்கரத்தோடு இயைத்துக் காட்டப்பட்டுள்ளமை அறியத்தக்கது. மற்றொரு சூத்திரத்தில் ஆடல் வல்லானைச் சுற்றி அமைந்துள்ளது 'திருவாசி' ஓம் என்னும் பிரணவமாகும். அப்பிரணவத்தைப் பொருந்தி அதனைவிட்டு நீங்காத அஞ்செழுத்து மந்திரமே பிரணவத்தின் உள்நிறைந்த ஒளியான ஆடல் வல்லான். இதனை, சீவன் முத்தர்கள் மட்டுமே அறிவர் என உண்மை விளக்கம் எடுத்துக்காட்டுகிறது.

இதனை,

**"ஓங்காரமெ நல்திருவாசி உற்று அதனில்**
**நீங்கா எழுத்தெ நிறை சுடராம் - ஆடல் இது**
**அற்றார் அறிவர் அணி அம்பலாத்தான் ஆடல் இது**
**பெற்றர் பிறப்பு அற்றார்பின்" (உண்மை விளக்கம் - சூ34)**

என்னும் சூத்திரத்தின் வழியாக அறியலாம். இச்சூத்திரத்திற்கு "அம்பலவாணனின் திருக்கூத்து நாம் உலக இன்பங்களை நுகர்வதற்கும் துணை செய்கிறது உலகை விடுத்து வீடு அடைவதற்கும் துணை செய்கிறது". என ஞானஉரை வகுத்துள்ளார் கு.வைத்தியநாதன். (உண்மை விளக்கம் உரை திருவாவடுதுறை ஆதிற வெளியீடு - ப.84)

**அஞ்செழுத்துமே அம்மையப்பர்**

'சிவ' என்னும் இரண்டெழுத்தே உலக உயிர்களுக்கு அம்மையப்பனாக நின்று உய்விக்கும் என்பதைத் திருக்களிற்றுப்படியார் உணர்த்துகிறது. "அம்மையப்பரே உலகுக்கு

அம்மையப்பர் என்றறிக" (திருக்களிற்றுப்படியார் - நூற் 1) என்பது சாத்திரம் காட்டும் சைவத் தத்துவம் ஆகும். அம்மையப்பர் என்பது சிறப்பு நிலையில் 'சிவ' என்னம் இரண்டெழுத்தின் வடிவமேயாகும். பொது நிலையில் 'அஞ்செழுத்துமே அம்மையப்பர் என்பதை உணர வேண்டும்.

**"அஞ்செழுத்துமே அம்மை அப்பர் தமைக் காட்டுதலால்**
**அஞ்செழுத்தை ஆறாகப் பெற்று அறிந்து - அஞ்செழுத்தை**
**ஓதப்புக்கு உள்ள மதியும் கெடில் - உமைகோன்**
**கேதம் அறவந்து அளிக்கும் கேள்" (திருக்களிற்றுப்பழயார் - 25)**

இச்சூத்திரத்திற்கு "அஞ்செழுத்து என்பது 'சிவாய நம' என்பதாகும் .....

இவற்றுள் 'சிவ' என்னும் இரு எழுத்துக்களும் முதன்மையானவை. அதற்குக் காரணம் அவை அம்மையப்பர் ஆகிய சிவபெருமானையும் அவனது சக்தி ஆகிய அருளாற்றலையும் குறிப்பது என்பதனால் ஆகும்" என அருளுரை செய்துள்ளார் திருவாவடுதுறை ஆதின சித்தாந்தப் பேராசிரியர் கு. வைத்தியநாதன். ஆக சிவாய நம என்னும் அஞ்செழுத்தில் சிவ என்பதே இறையும் அருளும் ஆகும். ஐந்தெழுத்தே உலக உயிர்களுக்கு எல்லாம் தாயும் தந்தையுமாக இருந்து அருள் செய்கிறது என்பதை எண்ணிப் போற்ற வேண்டும்.

**அஞ்செழுத்தும் அநாதி**

'சிவாய நம' என்னும் மந்திரத்தில் உள்ள ஐந்து எழுத்துக்களும் எவராலும் தோற்றுவிக்கப்படவில்லை என்றும், இவ்வெழுத்துக்கள் அநாதிகாலம்; தொட்டே உள்ளன என்றம் உண்மை விளக்கம் குறிப்பிடுகிறது. இதனை,

**"உற்றகுறி அழியும் ஓதுங்கால் பாடைகளில்**
**சற்றும் பொருள்தான் சலியாது - மற்றதுகேள்**
**ஈசன் அருள்ஆவி எழிலார் திரோதம்மலம்**
**ஆசில் எழுத்து அஞ்சில் அடவாம்" (உண்மை விளக்கம் - 40)**

என்ற சூத்திரத்தில் மனவாசகம் கடந்தார் விளக்கியுள்ளர். உலகப் பொருள்களுக்கு உரிய குறிகளாகிய எழுத்துக்கள் கால வெள்ளத்தில் மாற்றம் அடையும் அல்லத அழிந்து தோன்றும். ஆனால் சிவத்தைக் குறிக்கும் சி, அருளைக் குறிக்கும் வ, உயிரைக்குறிக்கும் ய, மறைப்பாற்றலைக் குறிக்கும் ந, ஆணவ மலத்தைக் குறிக்கும் ம ஆகிய ஐந்து எழுத்துக்களும் ஒரு காலத்தும் மாறுபடாது. இறைவன் உள்ள காலம் முதலே அதாவது அநாதியே ஐந்தெழுத்தும் உள்ளதாகத் தெளிவுபடுத்துகிறார். இதன் வழியாக அநாதி காலந்தொட்டே மறைத்தமிழும் நிலைத்திருப்பதை உணர வேண்டும். அதாவது தமிழை எவரும் தோற்றுவிக்கவில்லை என்ற உண்மையும் மேற்கண்ட பாடல்வழி நாம் அறிந்துகொள்ள வேண்டும். "அஞ்சில இரண்டு பழுதில்லை" என்னும் பழமொழியைப் பரவலாக் கேட்டிருக்கலாம். இதன் பொருள் என்னவெனில் ஐந்தெழுத்தில் 'சிவ' என்னும் இரண்டெழுத்து மட்டுமே சித்தாகும். அதாவது குற்றம் அற்றன என்பதாகும். இன்னும் சிலா் 'சிவ சிவ என்றிருந்தேன்' என்பார்கள். சிவ சிவ எனச் சிந்தித்திருப்பவர்கள் 'சஞ்சித கன்மம் ஆகிய வினைத் தொகுதியை இறைவனின் கருணையால் போக்கிக்கொண்டு திருமூலரைப் போல் சீவன் முக்தா்கள் ஆவா்.

**முடிவுரை**

ஆணவம், கன்மம், மாயை என்னும் மும்மலம் பற்றியது ஆன்மா. தூலமந்திரமாகிய நமசிவாய எனும் ஐந்தெழுத்தைச் சிவத்தலங்கள்தோறும் சென்று வாய்விட்டுப் போற்றி அவனருளால் அவன்தாள் வணங்கிப் பக்குவ அறிவைப் பெற வேண்டும். இதன் பயனாக மண்ணில் நல்ல வண்ணம் வாழ்ந்து சடமாகிய 'உலகப் பாச நீக்கம்' என்னும் தூய அறிவு

வரப்பெற்று, 'சிவாய நம' எனச் சிந்தித்து மலபரிபாகம், இருவினை ஒப்பு, சத்திநிபாதம் முதலான பக்குவப் படிநிலைகளைப் பெற வேண்டும். இத்தகு உயர்வு பெற்ற ஆன்மா 'சிவ சிவ' என சிந்தித்து வீடுபேறாகிய நிலைத்த இன்பத்தைப் பெற்று மகிழும் என்பதே திருமுறைகளும் சாத்திரநூல்களும் கூறும் முடிந்த முடிவாகும்.

**துணை நின்ற நூல்கள்**


1. இராசமாணிக்கனார். ம, சைவசமய வளர்ச்சி, பூம்புகார் பதிப்பகம், சென்னை
2. கண்ணப்ப முதலியார். பாலூர், தமிழ் மந்திரம், ராமையா பதிப்பகம் 3, கிஷ்ணபுரம், சென்னை
3. சுப்பிரமணிய பிள்ளை. கா.சைவசித்தாந்த, வரலாறு சாரதா பதிப்பகம், சென்னை
4. மேலது - மெய்கண்டாரும் சிவஞானபோதமும், பூம்புகார் பதிப்பகம், சென்னை
5. வைத்தியநாதன். கு - (உ.ஆ) திருவுந்தியார், திருக்களிற்றுப்படியார், உண்மை விளக்கம் திருவாவடுதுறை ஆதின சித்தாந்த பயிற்சி மையம் வெளியீடு, திருவிடைமருதூர்)
6. திருவாசகம், திருவாவடுதுறை ஆதின வெளியீடு, 2003.